# கழக வீடுகளுக்காகக் காத்திருக்கும் குடும்பங்கள் தற்காலிகமாகத் தங்கக் கூடுதல் வீடுகள்

***Tamil Seithi***, June 12, 2023

கழக வீடுகளுக்காகக் காத்திருக்கும் குடும்பங்கள் தற்காலிகமாகத் தங்குவதற்குத் கூடுதல் எண்ணிக்கையில் வீடுகள் ஒதுக்கப்படவிருக்கின்றன.

அடுத்த ஈராண்டில் எண்ணிக்கை ஒரு மடங்கு அதிகரிக்கப்பட்டு 4,000 வீடுகள் ஒதுக்கப்படும் என்று தேசிய வளர்ச்சிக்கான மூத்த துணை அமைச்சர் சிம் ஆன் (Sim Ann) தெரிவித்தார்.

கொள்கை ஆய்வுக் கழகத்தின் 35ஆம் ஆண்டு நிறைவு மாநாட்டில் பேசியபோது அவர் அது பற்றி அறிவித்தார்.

பிள்ளை வளர்ப்புக்கான தற்காலிக வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2021இல் 800ஆக இருந்த வீடுகளின் எண்ணிக்கையை இவ்வாண்டு 1,800க்கு அதிகரிக்கும் இலக்கை வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் எட்டியிருப்பதாக அவர் சொன்னார்.

இவ்வாண்டு இறுதிக்குள் அத்தகைய சுமார் 2,000 வீடுகள் திட்டத்தில் இடம்பெறும்.

புதிய கழக வீடு தயாராகும் வரை குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகளை அந்தத் திட்டம் வழங்குகிறது.